# குழந்தைகளை நேசித்த நேருஜி

அலகாபாத்தில் அழகு மகனாக
மோதிசுவருப்பின்
மணிவயிற்றில் உதித்த
“சிகப்பு நகை“
என்ற பொருள் கொண்ட
ஜவஹர்லால் நேருவே!
காசுமீரக் கால்வாய் என்ற
நெகர் மருவி
நேரு என்ற பட்டம் பெற்றவரே!
கூட்டுச்சேராக் கொள்கை உருவாக்கி
நாடுகளுக்கு முன்னோடியாக
நடுநிலை வகித்த நற்சான்றோரே!
பஞ்சசீலக் கொள்கைகள் அளித்த பண்பாளரே!
கோவாவிற்கு விடுதலை அளித்த கோமகனே
ஐந்தாண்டு திட்டங்களை தொடங்கி
அணைகளை கட்டி
“இந்தியாவின் புதுக்கோயில்கள்“
என்று அணைகளை ஆதரித்தவரே!
இரும்பு பெண்மணியான
இந்திரா பிரியதர்ஷினியை
உலகிற்கு அளித்து
பாரத பிரதமர் என்ற
பார் போற்றும் பதவியில் இருத்தி
20–அம்ச திட்டங்களை
நாட்டிற்கு அளிக்கச் செய்து
தீன் மூர்த்திபவனில்
நினைவாக நிற்பவரே!
உன் புகழ் வாழ்க !!

திருமதி. S.சாந்தி , M.A., B.Ed.,
ஆசிரியை ,
சாய்ராம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி.
திருவாரூர்.